# கூட்டுறவுச் சங்கங்களுக்கான இடைத் தேர்தல்

## ஜனவரி ’20ல் வேட்புமனுத்தாக்கல்

## ஜனவரி ’24ல் வாக்குப்பதிவு

## மாநிலத் தேர்தல் ஆணையர் அறிவிப்பு

தமிழகத்தில் கூட்டுறவுச் சங்கங்களில் காலியாக உள்ள நிர்வாகக்குழு உறுப்பினர்கள், தலைவர்கள், துணைத்தலைவர்கள் ஆகிய பதவிகளை நிரப்புவதற்கான இடைத்தேர்தல் ஜனவரி ’24 அன்று நடைபெறும் என்றும், இதற்கான வேட்புமனுத்தாக்கல் ஜனவரி’20 அன்று நடைபெறும் என்றும் கூட்டுறவுச் சங்கங்களுக்கான மாநிலத் தேர்தல் ஆணையர் திரு.ம.ரா.மோகன், இ.ஆ.ப., (ஓய்வு) தெரிவித்துள்ளார். இது சம்பந்தமாக அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு வருமாறு :-

### காலிப் பணியிடங்கள்

தமிழகத்தில் கூட்டுறவுச் சங்கங்களுக்கு ஐந்து நிலைகளில் நடைபெற்ற தேர்தலில் **21,027** சங்கங்களில் **2,04,889** நிர்வாகக்குழு உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். இவர்களில் **20,993** பேர் தலைவர்களாகவும், **20,996**பேர் துணைத்தலைவர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டு பொறுப்பேற்றனர். இதற்குப்பின்னர், தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்கள், துணைத்தலைவர்கள் மற்றும் நிர்வாகக்குழு உறுப்பினர்களில் சிலர் இறந்துவிடுதல் அல்லது தங்கள் பதவியை ராஜினாமா செய்தல் போன்ற காரணங்களால் அவர்கள் வகித்துவந்த பதவிகளில் காலிப்பணியிடங்கள் ஏற்பட்டன. இவ்வாறாக கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் மற்றும் பிற எட்டு செயற்பதிவாளர்களின் கட்டுப்பாட்டில் உள்ள **316** கூட்டுறவுச் சங்கங்களில் **416** நிர்வாகக்குழு உறுப்பினர் பணியிடங்களும், **65** கூட்டுறவுச் சங்கங்களில் **37** தலைவர் பணியிடங்களும், **31** துணைத்தலைவர் பணியிடங்களும் தற்போது காலிப்பணியிடங்களாக உள்ளன.

### இடைத்தேர்தல்

மேற்குறிப்பிட்ட **416** நிர்வாகக்குழு உறுப்பினர் பணியிடங்களையும், **37** தலைவர் பணியிடங்களையும், **31** துணைத்தலைவர் பணியிடங்களையும் இடைத்தேர்தல் மூலம் நிரப்புவதற்கான தேர்தல் திட்டத்தையும், தேர்தல் அட்டவணையையும் தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல் ஆணையம் வெளியிட்டுள்ளது. அந்தந்த மாவட்ட தேர்தல் அலுவலர்கள்

–2–

தேர்தல் அறிவிப்பினை வெளியிட்டுள்ளனர். இந்த **416** நிர்வாகக்குழு உறுப்பினர் காலிப்பணியிடங்களில் **82** பணியிடங்களை ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினத்தவரைக் கொண்டும், **114** பணியிடங்களை பெண்களைக் கொண்டும், **220** பணியிடங்களை பொதுப்பிரிவினரைக் கொண்டும் நிரப்பவேண்டும். தலைவர் மற்றும் துணைத்தலைவர் தேர்தலில் வகுப்புவாரி இட ஒதுக்கீடு கிடையாது.

**வாக்காளர் பட்டியல்**

மேற்குறிப்பிட்ட **316** கூட்டுறவுச் சங்கங்களில் **416** நிர்வாகக்குழு உறுப்பினர்களை தேர்ந்தெடுப்பதற்கும், **65** கூட்டுறவு சங்கங்களில் **37** தலைவர்கள் மற்றும் **31** துணைத்தலைவர்களை தேர்ந்தெடுப்பதற்கான தேர்தல் திட்டத்தின்படி தொடர்புடைய சங்கங்களில் **4.1.2014** அன்று வாக்காளர் பட்டியல் வெளியிடப்படும். இதன் பேரிலான ஆட்சேபணை ஏதும் இருப்பின் அதனை **6.1.2014** வரை தெரிவிக்கலாம். இறுதி வாக்காளர் பட்டியல் **8.1.2014** அன்று வெளியிடப்படும்.

**வேட்புமனுத் தாக்கல்**

இந்த இடைத்தேர்தலுக்கான வேட்புமனுக்களை 20.1.2014 காலை **10.00** மணி முதல் மாலை **4.00** மணிவரை தாக்கல் செய்யலாம். அன்று மாலை **5.30** மணிக்குள் வேட்புமனுக்கள் பரிசீலனை செய்யப்பட்டு அன்று மாலை **6.00** மணிக்கு தகுதியான வேட்பாளர் பட்டியல் தேர்தல் அலுவலரால் வெளியிடப்படும்.

**வேட்புமனு திரும்பப்பெறுதல்**

தாக்கல் செய்த வேட்புமனுவை திரும்பப் பெற விரும்புவோர் **21.1.2014** காலை **10.00** மணிமுதல் மாலை **4.00** மணி வரை திரும்பப் பெற்றுக்கொள்ளலாம். அன்று மாலை **5.00** மணிக்கு போட்டியிடும் வேட்பாளர்களின் இறுதிப்பட்டியல் தேர்தல் அலுவலரால் வெளியிடப்படும்.

**வாக்குப்பதிவு**

இந்த இடைத்தேர்தலுக்கான வாக்குப்பதிவு **24.01.2014** அன்று காலை **8.00** மணிக்குத் தொடங்கி மாலை **5.00** மணி வரை நடைபெறும்.

**வாக்கு எண்ணிக்கை**

இந்த இடைத்தேர்தலில் **24.01.2014** அன்று பதிவான வாக்குகளை எண்ணும் பணி மறுநாள், அதாவது **25.01.2014** காலை **10.00** மணிக்குத் தொடங்கும். வாக்குகள் எண்ணி முடிக்கப்பட்டவுடன் முடிவுகள் அறிவிக்கப்படும்.

–3–

**<u>தலைவர், துணைத்தலைவர் தேர்தல்</u>**

தலைவர் மற்றும் துணைத்தலைவரை தேர்ந்தெடுப்பதற்கான தேர்தல் அறிவிப்பு **25.01.2014** அன்று தேர்தல் அலுவலரால் வழங்கப்படும். தலைவர் மற்றும் துணைத்தலைவரை தேர்ந்தெடுப்பதற்கான தேர்தல் **29.01.2014** அன்று காலை **10.00** மணிக்கு நடைபெறும்.

இடைத்தேர்தல் நடைபெறவுள்ள கூட்டுறவுச் சங்கங்களின் பெயர் மற்றும் இதர விபரங்கள் குறித்து அந்தந்த மாவட்ட தேர்தல் அலுவலரையும், மாவட்ட தேர்தல் பார்வையாளர்களான மண்டல இணைப்பதிவாளர்களையும் தொடர்பு கொள்ளலாம்.

மேற்கண்டவாறு கூட்டுறவுச் சங்கங்களுக்கான மாநிலத் தேர்தல் ஆணையர் திரு. ம.ரா. மோகன், இ.ஆ.ப. (ஓய்வு) தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

**ஆணையர்.**

**கூட்டுறவுச் சங்கங்களுக்கான இடைத் தேர்தலில் தேர்ந்தெடுக்கப்படவுள்ள நிர்வாகக்குழு உறுப்பினர்கள்,**

**தலைவர்கள் மற்றும் துணைத்தலைவர்கள் எண்ணிக்கை விவரம்**

| வ.எண். | மாநில தேர்தல் அலுவலரின் பெயர் | இடைத்தேர்தல் நடைபெற உள்ள சங்கங்களின் எண்ணிக்கை | இடைத்தேர்தலில் தேர்ந்தெடுக்கப் பட வேண்டிய நிர்வாகக்குழு உறுப்பினர்களின் எண்ணிக்கை | தேர்ந்தெடுக்கப்படவேண்டிய உறுப்பினர்களின் பிரிவு | | | | இடைத் தேர்தலில் தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய தலைவர்/ துணைத்தலைவர் விவரம் | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | ஆதிதிராவிடர்/ பழங்குடியினர் | மகளிர் | பொது | கூடுதல் | சங்கங்களின் எண்ணிக்கை | தலைவர் | துணைத் தலைவர் |
| 1. | கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் | 229 | 286 | 42 | 81 | 163 | 286 | 43 | 27 | 17 |
| 2. | இயக்குநர், மீன்துறை | 21 | 27 | 16 | 2 | 9 | 27 | 2 | 2 | 1 |
| 3. | கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் (வீட்டுவசதி) | 30 | 41 | 15 | 12 | 14 | 41 | 6 | 2 | 4 |
| 4, | இயக்குநர், கைத்தறி மற்றும் துணிநூல் | 24 | 32 | 4 | 5 | 23 | 32 | 11 | 6 | 6 |
| 5. | முதன்மை நிர்வாக அலுவலர், காதி மற்றும் கிராமிய தொழில் துறை | 1 | 1 | - | – | 1 | 1 | 1 | – | 1 |
| 6. | முதன்மை நிர்வாக அலுவலர், பனைவாரியம் | 2 | 2 | - | – | 2 | 2 | 2 | – | 2 |
| 7. | இயக்குநர், வேளாண்மைத் துறை | 1 | 1 | - | 1 | – | 1 | – | – | – |
| 8. | இயக்குநர், சமூகநலத்துறை | 1 | 1 | - | 1 | - | 1 | – | – | – |
| 9. | தொழில் துறை மற்றும் தொழில் வணிகத்துறை இயக்குநர் | 7 | 25 | 5 | 12 | 8 | 25 | - | – | – |
| | கூடுதல் : | 316 | 416 | 82 | 114 | 220 | 416 | 65 | 37 | 31 |

ஆணையர்.